
# உன் பிறந்த நாள்! தமிழர்க்குச் சிறந்தநாள்!



மன்னர்மா மன்னர்தம் அரண்மனை மாடத்தில்
மகனாய்நீ தோன்ற வில்லை!
மாணிக்கத் தொட்டிலில் தாலாட்டுக் கேட்டுநீ
மணிவிழி மூட வில்லை!
தென்னவர் குலம்போற்றும் இசைவாணர் குடும்பத்தில்
செல்வமே பிறந்து வந்தாய்!
சேயான நாள்முதல் “தாய்மாமன்” தோளிலே
சிட்டுப்போல் தவழ்ந்து வந்தாய்!
பொன்மேனி வாடாமல் உன்னைத்தன் நெஞ்சுக்குள்
பொத்தியே அவர் வளர்த்தார்!
புகழ்மாலை சூடிநீ உலகத்தை வலம்வரப்
பொழுதெலாம் “கனா”வ ளர்த்தார்!
கன்னலில் கனிச்சாற்றில் மூழ்கிடும் வண்டுபோல்
கல்வியில் திளைக்க வைத்தார்!
“கண்ணா!நீ வாழ்க!”என அண்ணாவே உனைத்தேர்தல்
களத்திலே குதிக்க வைத்தார்!

எய்தாய்நீ இலக்கினை! வடக்குநம் தெற்கினை
ஏற்குமோர் வழிவ குத்தாய்!
ஏடாளும் வேந்தனாய் நாடாளு மன்றத்தில்
இலக்கணம் நீப டைத்தாய்!
மையத்தில் குவிந்துள்ள அதிகாரம் பற்றிநீ
மகத்தான நூல்வ டித்தாய்!
“மாநில சுயாட்சி”யின் உள்ளார்ந்த மாண்பினை
மாற்றாரும் உணர வைத்தாய்!
வையத்தில் வளர்ந்துவரும் நாடுகள் சார்பிலே
வாதாடி வெற்றி பெற்றாய்!
வாகான உரையினால் “தோகா”வின் மாநாட்டு
வரலாற்றில் நிலைத்து விட்டாய்!
செய்தக்கச் செய்கின்ற சான்றாண்மை மிக்கநின்
சீர்த்தியால் கீர்த்தி பெற்றாய்!
திருவாரூர் மண்வாசம், திருக்குவளை மலர்வாசம்”
திக்கெட்டும் கமழச் செய்தாய்!

தந்தை,தாய் வழிவந்த அன்பன்றோ! “உன்மாமன்”
தமிழ்தந்த அறிவும் அன்றோ!
“தாத்தாவும் பாட்டியும்” வீரத்தை ஈர்த்தைத்
தரவந்தப் பொலிவும் அன்றோ!
சிந்தனை நெற்றியின் மடிப்புகள் ஒவ்வொன்றும்
செயலுக்கு வியூகம் அன்றோ!
சிங்கம்நிகர் நடைகாணக் கண்கோடி வேண்டுமே!
“ திராவிடத் தீரம்” அன்றோ!
சந்தன நிறமன்றோ! தங்கத்தின் ஒளியன்றோ!
தனிஎழில் வதனம் அன்றோ!
“தலைவகிடு” அதில்கூடத் தலைவனைப் பின்பற்றும்
தலைமுடி அழகும் அன்றோ!
சுந்தரம் என்றாலே அழகென்று பொருள்என்று
சொல்வார்கள்! “தியாக ராஜ
சுந்தரம்” நீயன்றோ!அழகுக்கே அழகூட்டச்
சொல்தேவை இல்லை யன்றோ!

கலைஞரின் வளர்ப்புநீ! கலைஞரின் வார்ப்புநீ!
கலைஞரின் “ஞான நகல்”நீ!
கலைஞரை ஆயிரம் கவிஞர்கள் பாடலாம்!
கலைஞரின் பாடு பொருள்நீ!
கலைஞரின் நம்பிக்கை! கலைஞரின் மனசாட்சி!
கலைஞரின் மூளை பலம்நீ!
கடல்போலப் படைநூறு வந்தாலும் கலைஞர்க்குக்
களத்திலே யானை பலம்நீ!
அலையில்நீர்க் குமிழிபோல் இடையில்நீ பிரிந்ததை
அன்றாடம் எண்ணு கின்றோம்!
அருகில்நீ இல்லாத கலைஞரைப் பார்க்க,மனம்
ஆற்றாமல் விம்மி நின்றோம்!
சிலையில்நின் திருமுகம் ஒளிவிடும் காட்சியில்
சிந்தை,உடல் சிலிர்த்து நின்றோம்!
“சிறந்தநாள்! தமிழர்க்குன் பிறந்தநாள்!” என்றுன்னைச்
சிரம்தாழ்த்தி வணங்கு கின்றோம்!

**... கவிச்சுடர் கவிதைப்பித்தன்**



## சென்னை விமான நிலையத்தில் இயந்திரக் கோளாறால் விமானம் அவசர தரையிறக்கம்!

### 166 பேர் உயிர் தப்பினர்!

மீனம்பாக்கம், ஆக.17- கோலாலம்பூரில் இருந்து கேரள மாநிலம் கோழிக்கோடுக்கு பறந்து கொண்டிருந்த ஏர் ஏசியா விமானம் நடுவானில் பறந்தபோது திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டது. இதனால் அந்த விமானம் நேற்று முன்தினம் நள்ளிரவு சென்னை விமான நிலையத்தில் அவசரமாக தரையிறங்கியது. அந்த விமானம் விபத்திலிருந்து தப்பியதுடன், அதில் இருந்த 158 பயணிகள் உள்பட 166 பேர் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர். மலேசிய நாட்டின் தலைநகர் கோலாலம்பூரில் இருந்து 158 பயணிகள், 8 விமான ஊழியர்கள் என மொத்தம் 166 பேருடன் ஏர் ஏசியன் ஏர்லைன்ஸ் கேரள மாநிலத்தின் கோழிக்கோடு நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த விமானம் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.50 மணியளவில் சென்னை வான் எல்லையில் பறந்து கொண்டிருந்த போது, திடீரென இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கண்டறிந்தார். இதே நிலையில் விமானத்தை தொடர்ந்து இயக்கினால் பேராபத்து நிகழலாம் என்பதை உணர்ந்து, இதுபற்றி சென்னை விமான நிலைய கட்டுப்பாட்டு அறைக்கு விமானி தகவல் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, சென்னையில் ஏர் ஏசியன் விமானம் அவசரமாக தரையிறங்குவதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளும் துரிதகதியில் செய்து முடிக்கப்பட்டது. பின்னர், அந்த விமானம் சென்னையில் தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதையடுத்து, கோழிக்கோடு நோக்கி சென்ற ஏர் ஏசியன் விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக, நேற்று முன்தினம் நள்ளிரவு 12.10 மணியளவில் சென்னை விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறங்கியது.

பின்னர், விமானத்தில் பொறியாளர்கள் ஏறி, இயந்திரக் கோளாறுகளை பழுதுபார்க்கும் பணிகளில் ஈடுபட்டனர். எனினும், அந்த விமானத்தின் பழுது பார்க்க முடிய வில்லை.

இதனால் விமானத்தில் இருந்த அனைத்து பயணிகளும் கீழே இறக்கப்பட்டு, சென்னை விமான நிலையத்தில் இருந்து சொகுசு பேருந்துகள் மூலம் சென்னை நகர ஓட்டல்களில் தங்க வைக்கப்பட்டனர். இந்த விமானத்தின் இயந்திரக் கோளாறு பழுது பார்க்கப்பட்டு, இன்று மாலை மீண்டும் கோழிக்கோடுக்குப் புறப்பட்டு செல்லும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. விமானம் நடுவானில் பறந்த போது இயந்திரக் கோளாறு ஏற்பட்டிருப்பதை விமானி கண்டறிந்து உடனடி நடவடிக்கை எடுத்து, சென்னையில் பாதுகாப்பாக தரையிறக்கியதால், விமானத்தில் இருந்த 158 பயணிகள் உள்பட 166 பேர் நல்வாய்ப்பாக உயிர் தப்பினர்.

இதனால் சென்னை விமானநிலையத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு பயணிகளிடையே பரபரப்பு நிலவியது.

# ஏடாகி வாழ்க்கை தந்து, ஏனடா மாறன் சென்றார்?






திங்களைக் குழைத்த தேகம்!
தீக்கதிர் கனன்ற நெஞ்சம்!
பொங்குறு சிங்கத் தோற்றம்!
புதுப்புனல் பாயும் வேகம்!
வங்கத்துச் சுபாசு போல
வணங்காத கொள்கை ஊக்கம்!
மங்காத கழகங் கண்ட
மாவீரன் மாறன் தானே!

கழகத்தின் இதயம் காக்க
தன்னித யநோய்ம றந்தான்!
நிழல்தரு இயக்கம் போற்ற
நீளுடல் உயிரை யீந்தான்!
சுழன்றிடு தேனீ போன்றே
சுடரொளி தந்தே நின்றான்!
உழன்றிடு மக்கள் மீட்க
உழைத்தவன் மாறன் தானே!

துன்பங்கள் வந்த போதும்
துவண்டிடாத் தோள்கள் கொண்டான்!
இன்புறு காட்சி கண்டே
இருமாந்தி ருக்க மாட்டான்!
அன்பர்கள் அணுகி வந்தால்,
அடிநாவால் சுடவும் மாட்டான்!
தென்மொழி யினத்தைப் போற்ற
தன்முகங் காட்டி நின்றான்!

மண்டிய இருளை யெல்லாம்
மணித்திரு விளக்காய் நின்று
வண்ணங்கொள் மேன்மை செய்தான்!
வாழ்வெலாம் கழக மென்றே
எண்ணத்திற் கலைஞர் கொண்டான்!
இலட்சியம் உயிர்மூச் சென்றான்!
உண்மையே தொண்டென் றெண்ணி
உணர்த்திய வீரன் தானே!

இடர் பல வந்த போதும்
இடம்பெய ராத தொண்டன்!
குடம்நிறை தேனைப் போன்றே
கருத்துகள் மொண்டு தந்தான்!
சுடர்மொழித் தமிழில் நல்ல
சுவைதரும் நூல்கள் நெய்தான்!
கடற்சிப்பி முத்து போலக்
கழகத்தை அணிதான் செய்தான்!

எரிமலை பகைவர் முன்பாம்
எதிர்ப்பதில் குறைகள் கண்டால்
பெரியாரின் கொள்கைத் தீர்ப்பு!
பகுத்தறி வொளிப ரப்பும்
வரிப்புலித் துடிப்பு ! மாமன்
வழிவந்த கலைஞர் வார்ப்பு !
சரித்திரம் படைத்த அன்னோன்
திராவிடக் காளை அன்றோ!

நாடாளு மன்றந் தன்னில்
நாட்டுப்ப ணியாற்றி நின்றும்
வீடான கழகந் தன்னில்
விளக்கொளி வீசி நின்றும்
காடான சமுதா யத்தைச்
சீர்திருத் தங்கள் செய்தும்
ஏடாகி வாழ்க்கை தந்தே
ஏனடா மாறன் சென்றார்?

சூரியப் பாதை மீது
சுழலும் பூமி போன்றே
வீரியக் கொள்கைக்காக
வலிவுடைக் கலைஞ ரோடே
ஆரியப் படையை வீழ்த்த
அணிவகுத் தஅட லேறாம்!
காரிருள் நீக்கி வென்ற
கன்றைநாம் மறக்க லாமோ!

கவிஞர் **தமிழ்தாசன்** - கழகத் தீர்மானக் குழுத் தலைவர்



## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

# தே.மதியழகன் எம்.எல்.ஏ.தாயார் திருமதி.தே.கண்ணம்மாள் மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!

*கிருஷ்ணகிரி, ஆக.17- கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் அவர்களின் தாயார் கண்ணம்மாள் இயற்கை எய்தினார்.*



*கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம், ஆம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த மறைந்த தேவராஜ் அவர்களின் மனைவியும், டி.உதயகுமார் டி.வளையாபதி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான டி.மதியழகன், திருமதி.குணவதிமோகன் ஆகியோரது அன்பு தாயாருமான திருமதி.டி.கண்ணம்மாள் தேவராஜ் அவர்கள் நேற்று முன்தினம (15.08.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 06.30 மணிக்கு இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அம்மையாரது இறுதிச் சடங்கு நேற்று (16.08.2025 - சனிக்கிழமை) மதியம் 12.30 பர்கூர் அடுத்த ஆம்பள்ளி கிராமத்தில் உள்ள பண்ணை தோட்டத்தில் நடைபெற்றது.*

*அவருக்கு வயது 92.அவரது மறைவுச் செய்தி அறிந்து கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மற்றும் தருமபுரி மாவட்டங்களில் இருந்து ஏராளமான கழக நிர்வாகிகள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.*




தி.மு.க. அயலக அணியான பஹ்ரைன் என்.ஆர்.டி.ஐ.ஏ. அமைப்பின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் நடைபெற்றது. இதில் கருணாநிதி சண்முகம், குடந்தை ஆரிப், மணிவண்ணன், சதீஷ்குமார், சோழகர் திருமேனி, சுல்தான், இப்ராஹிம், மேலப்பூந்தை இஸ்மாயில், பிரபாகரன், தனசேகரன், மன்னை செல்வம், சரபுதீன், ஆரூர் சாகுல், சேகர் ராஜலிங்கம், அக்பர் அலி, இளையராஜா, மிராஜா, அல்லாப் பிச்சை, அசோக் குமார், ஆசாத் மைதீன், ஆழியூர் சாகுல், பிரபாகரன், பக்ருதீன், ஆரூர் வெங்கட், அப்துல் ஜப்பார், ராஜசேகர், சிதம்பரம், ரவிசங்கர், அஸ்ரி துரை, முருகன், சீனிவாசன், முகமது அக்கிம், தக்கலை சாம், விக்கி, மணிமாறன், முகமது சலீம் உள்ளிட்ட கழகத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.